**கேகாலை நகர சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 26 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஆகஸ்ட் 25 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கேகாலை நகர சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கை

கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுடன் சபையினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ஐந்தொகைத் திகதியில் உள்ளவாறு ரூபா 445,141,678 தொகையாகக் காணப்பட்ட காணியும் கட்டிடங்களினதும் பெறுமதியில் ரூபா 30,000,000 கிரயமுடைய 150 வாராந்த சந்தைக் கடைகள் 2014 சனவரி மாதத்தின் போது கழற்றி அகற்றப்பட்டமையின் காரணமாக சொத்துக்களுக்காக ஏற்பட்ட தாக்கங்கள் நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி, முத்திரை வரி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் வரி ரூபா 601,329 கூட்டுத்தொகையாக இருந்த போதிலும் அது ரூபா 3,836,538 ஆக ரூபா 3,235,209 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டமையால் ஐந்தொகையின் பொறுப்புக்கள் அப் பெறுமானத்தினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ஆதனங்களை வாடகைக்கு விடும் பதிவேட்டின் பிரகாரம் 6 ஆதன விடயங்கள் மற்றும் 83 காணி கட்டிட விடயங்களின் பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக ஐந்தொகையில் நிலையான சொத்துக்கள் சரியாகக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் ஆசிய மன்றத்தின் மூலம் நன்கொடையாகக் கிடைத்த 507 நூலகப் புத்தகங்களின் பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக நிலையான சொத்துக்களின் உள்ளபடியான பெறுமதி ஐந்தொகையின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) நிலையான சொத்துப் பதிவேட்டில் காண்பிக்கப்பட்ட ரூபா 964,975 தொகையான 07 மோட்டார் வாகன விடயங்கள் கணக்கீடு செய்யப்படாமையினால் நிலையான சொத்துக்கள் அப்பெறுமானத்தினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) நிலுவை முத்திரைக் கட்டணம் ரூபா 2,486,842 தொகை மற்றும் ரூபா 519,375 தொகையான நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(எ) சபைக்கு உரித்துக் கையளிக்கப்படாத சப்ரகமுவ மாகாண பிரதம செயலாளரின் கீழுள்ள 06 வாகனங்கள் மற்றும் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்குச் சொந்தமான வாகனமொன்றை உள்ளடக்கிய 07 வாகனங்களின் பெறுமதியான ரூபா 7,325,000 தொகை நிலையான சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்டமையால் நிலையான சொத்துக்கள் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) ரூபா 55,653 தொகையான மதிப்பிழந்த காசோலைகளின் பெறுமதி நேரடியாக முற்கொடுப்பனவுகளின் கீழ் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

03 கணக்கு விடயங்களுக்குரிய நிதிக்கூற்றுக்களின் படி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 41,363,129 ஆக இருந்ததுடன் உபயோகப் பதிவேடுகள் / அறிக்கைகளின் படி கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 30,709,204 ஆனமையால் வேறுபாடு ரூபா 10,653,925 ஆகும்.

### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சிய பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை முறையே ரூபா 244,905 ஆகவும் ரூபா 43,472,473 ஆகவும் இருந்தன.

### 1.3.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

2004 ஒக்டோபர் 11 ஆந் திகதி ய 118 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கை மற்றும் தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 மற்றும் 4.6 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் இடமாற்றலாகிச் சென்ற மற்றும் சேவையைக் கைவிட்டுச் சென்ற 16 ஊழியர்களிடம் இருந்து ரூபா 182,324 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.6 அதிகாரமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

2011 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சொத்துக்களின் பட்டோலை மற்றும் பொருள் மெய்மையாய்வு மீதிகள் என்பவற்றை சமமாக்குவதற்காக 05 நாட்குறிப்புப் பதிவுகளின் மூலம் ரூபா 5,111,597 தொகை முறையான அங்கீகாரமின்றி கணக்குகளுக்கிடையே சிராக்கப்பட்டிருந்த போதிலும் மிளாய்வாண்டின் கணக்கு தயாரிக்கும் போது அதனை சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 49,050,076 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 23,342,929 ஆனமையால் ரூபா 25,707,147 தொகையான அதிகரிப்பு காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ஏனைய வருமானம் அதிகரித்தமை மற்றும் மூலதனச் சொத்துக்களின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவினங்கள் குறைவடைந்தமை நிதி விளைவின் அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 9,985 | 10,533 | 548 |
| (ii) | வாடகை | 33,876 | 34,246 | 370 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 860 | 1,330 | 470 |
| (iv) | ஏனைய வருமானம் | 66,546 | 81,044 | 14,498 |

#### 2.3.2 முத்திரைக் கட்டணம்

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 2,486,842 தொகையான முத்திரைக் கட்டணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.3.3 பரிவர்தனை கோபுரக் கட்டணம்

06 பரிவர்தனை கோபுரங்களை நிர்மாணிப்பதற்கான அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 130,000 தொகை அறவிடப்பட்டிராததுடன் 11 பரிவர்தனைக் கோபுரங்களுக்குரிய இணக்கக்கட்டணம் ரூபா 36,000 தொகை 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இல்க அதிவிஷேட வர்த்தமானி அறவித்தலின் ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.4 வருமானத்தை அறவிடல்**

மீளாய்வாண்டின் போது அறவிடுவதற்கிருந்த ரூபா 26,813,155 தொகையான நிலுவை வருமானங்களிலிருந்து ரூபா 4,447,013 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அது நிலுவை வருமானத்தில் 17 சதவீதமான குறைந்த சதவீதத்தை கொண்டிருந்தமையால் நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாடற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்ட பௌதீக வளங்கள் தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது ரூபா 897,500 கூட்டுத் தொகையான சொத்துக்கள் காணப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டது.

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

மீரிஹெல்ல சிறிய வீதியில் திரும்புகின்ற வடக்கு சுற்றுவட்ட மீதி வரை வீதி முழுவதும் கொங்கிரீட் சிறுகற்கள் இட்டு அமைப்பதற்காக அளவிடை அறிக்கையின் வேலை விடய இலக்கம் 06 இக் கீழ் சட்டரின் ஈடுபடுத்தல் தொடர்பாக 2014 பெப்ரவரி 27 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது நிர்மாணத்தின் சட்டரின் அடிக்கப்படாத 15.03 சதுர மீற்றருக்காக ரூபா 12,626 தொகை அதிகரித்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கடன்பட்டோர் கட்டுப்பாடு
(ஆ) இருப்புக் கட்டுப்பாடு
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்